# 20 தொகுதி இடைத்தேர்தல்: அண்ணா தி.மு.க. தேர்தல் பணிக்குழுவில் கூடுதல் பொறுப்பாளர்கள்

## எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் அறிவிப்பு

சென்னை, நவ.5–

20 தொகுதி இடைத்தேர்தலில் அண்ணா தி.மு.க. தேர்தல் பணிக்குழுவுக்கு கூடுதல் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அண்ணா தி.மு.க. ஒ ரு ங் கி ணை ப் பா ள ரு ம் , துணை முதலமைச்சருமான ஓ.பன்னீர்செல்வம், இணை ஒ ரு ங் கி ணை ப் பா ள ரு ம் , முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி ஆகியோர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:–

விரைவில் நடைபெற உள்ள சட்டசபை தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில் அண்ணா தி.மு.க. தேர்தல் பணிக்குழுவுக்கு கூடுதல் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி,

அரவக்குறிச்சி தொகுதி– அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்ற செயலாளர் தமிழ்மகன் உசேன்,

பாப்பிரெட்டிபட்டி தொகுதி– கொள்கை பரப்பு துணைச்செயலாளர் செ.ம. வேலுசாமி, அமைப்பு செயலாளர் ப.மோகன்,

திருவாரூர் தொகுதி – முன்னாள் அமைச்சர் ஜீவானந்தம், முன்னாள் எம்.எல்.ஏ. ஆசைமணி,

திருப்போரூர் தொகுதி–மீனவர் பிரிவு செயலாளர் நீலாங்கரை எம். சி.முனுசாமி, அமைப்பு சாரா ஓட்டுனர்கள் அணிச்செயலாளர் கமலக்கண்ணன்

ஆகியோர் நியமிக்கப்படு கிறார்கள்.

### பெரம்பூரில் கோகுல இந்திரா

மானாமதுரை தொகுதி பொறுப்பாளராக நியமிக்கப்பட்டு இருந்த முன்னாள் அமைச்சர் கோகுல இந்திரா, பெரம்பூர் தொகுதி பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஒட்டப்பிடாரம் தொகுதி தேர்தல் பணிக்குழு பொறுப்பாளராக நியமிக்கப்பட்டு இருந்த அமைச்சர் கடம்பூர் ராஜூ விளாத்திக்குளம் தொகுதி பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

விளாத்திக்குளம் தொகுதி பொறுப்பாளராக நியமிக்கப்பட்டு இருந்த முன்னாள் அமைச்சர் எஸ்.பி.சண்முகநாதன் எம்.எல்.ஏ. ஒட்டப்பிடாரம் தொகுதி பொறுப்பாளராக மாற்றம் செய்யப்படுகிறார்.

சம்பந்தப்பட்ட சட்டமன்ற தொகுதிகளைச் சேர்ந்த கழக நிர்வாகிகளும், கழக உடன் பிறப்புகளும், தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்களுக்கு முழு ஒத்துழைப்பு நல்கி, சிறப்பான முறையில் தேர்தல் பணிகளை ஆற்றிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

## தீபாவளி பண்டிகையையொட்டி

# அரசு போக்குவரத்து கழக பஸ்களில் 5.16 லட்சம் பயணிகள் பயணம்

## அதிக கட்டணம் வசூலித்த ஆம்னி பஸ்களுக்கு ரூ.31 லட்சம் அபராதம்; 4 பஸ்கள் பறிமுதல்



**சென்னை, நவ.5–**

**தீபாவளி திருநாளை முன்னிட்டு 5 லட்சத்து 16 ஆயிரத்து 252 பயணிகள் பாதுகாப்பான முறையில் தங்களின் சொந்த ஊர்களுக்கு பயணம் செய்தனர் என்று போக்குவரத்துத்துறை அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் பேருந்து நிலையங்களில் ஆய்வு மேற்கொண்டபோது தெரிவித்தார்.**

தீபாவளித் திருநாளை முன்னிட்டு, பொதுமக்கள் சிரமமின்றி சொந்த ஊர்களுக்கு பயணம் செய்கின்ற வகையில் 2, 3, 4 மற்றும் 5–ந் தேதி ஆகிய நாட்களில் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

நாளது வரையில் 1,45,807 பயணிகள் முன்பதிவு செய்துள்ளனர். சென்னையிலிருந்து 55,488 பயணிகளும், பிற ஊர்களிலிருந்து 90,319 பயணிகளும் முன்பதிவு செய்துள்ளனர்.

அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் தீபாவளித் திருநாளை முன்னிட்டு சிறப்பு பேருந்து இயக்கப்படுவதை எம்.ஜி.ஆர். கோயம்பேடு பேருந்து நிலையம் தொடங்கி ஆம்னி பேருந்து நிலையம், மாதவரம் புதிய பேருந்து நிலையம், கே.கே.நகர், தாம்பரம் சானிடோரியம், பூவிருந்தவல்லி ஆகிய பேருந்து நிலையங்கள் மற்றும் சுங்கச் சாவடிகள் ஆகியவற்றை நேற்று நள்ளிரவு வரை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டதைத் தொடர்ந்து, நேற்றும் (4–ந் தேதி) ஆய்வு மேற்கொண்டார்.

### ரூ.6.84 கோடி வருவாய்

போக்குவரத்துத் துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:–

“கடந்த 2–ந் தேதி அன்று 1,62,162 பயணிகளும், 3–ந் தேதி அன்று 2,23,178 பயணிகளும், நேற்று (4–ந் தேதி) 1,30,902 பயணிகளும் ஆகமொத்தம் 5 லட்சத்து 16 ஆயிரத்து 252 பயணிகள் சென்னையிலிருந்து பயணம் செய்துள்ளனர். இதனால் போக்குவரத்துக் கழகங்களுக்கு 6 கோடியே 84 லட்சம் ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது. சென்ற ஆண்டு மொத்தமாக 5 லட்சத்து 85 பயணிகள் பயணம் செய்திருந்தனர். இந்த ஆண்டு 6 லட்சத்து 25 ஆயிரம் பயணிகள் பயணம் செய்வார்கள் என எதிர்பார்த்து, அதற்கு உண்டான முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளை போக்குவரத்துக் கழகங்கள் செய்திருக்கிறது.

இந்த ஆண்டு தாம்பரம் ரெயில் நிலைய பேருந்து நிலையத்திலிருந்தும் பேருந்துகள் இயக்கப்படுவது பொதுமக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. அங்கிருந்து 10,610 பயணிகள், சுமார் 200 பேருந்துகளில் பயணம் செய்திருக்கிறார்கள். 4 நாட்கள் பேருந்துகள் இயக்கம் செய்யப்படுவதால் கூட்ட நெரிசல் இன்றி பொதுமக்கள் தங்கள் ஊர்களுக்கு சிறமமின்றி பயணம் செய்வது அம்மாவின் அரசிற்கு கிடைத்த பாராட்டு.

### ஆம்னி பஸ்களில் ரூ.31 லட்சம் அபராதம் வசூல்

ஆம்னி பேருந்து நிலையத்திலும் நெடுநேரம் ஆய்வு மேற்கொண்டேன். 1,431 ஆம்னி பேருந்துகள் பரிசோதனை செய்யப்பட்டு, அதன் மூலம் 31 லட்சத்து 17 ஆயிரம் ரூபாய் பிணைக்கட்டணமாக வசூல் செய்யப்பட்டுள்ளது. அதிக கட்டணம் வசூலித்த 10 பேருந்துகளில் அதன் கூடுதல் தொகையினை அந்தந்த பயணிகளுக்கு திரும்ப அளிக்கப்பட்டது. 4 பேருந்துகள் உரிய ஆவணங்கள் இல்லாதால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. நேற்று விடியற்காலை 3 மணி வரையில் அனைத்து பேருந்து நிலையங்கள், சுங்கச் சாவடிகள் உள்ளிட்ட இடங்களில் ஆய்வு மேற்கொண்டேன்.

தொழிற்சங்கங்களை பொறுத்த மட்டில் அவர்கள் வைத்த கோரிக்கைகளில் போனஸ், பண்டிகை முன்பணம், ஒய்வூதாரரின் பணப்பலன்கள் உள்ளிட்ட பெரும்பாலான கோரிக்கைகளை முதலமைச்சரும், துணை முதலமைச்சரும் நிறைவேற்றி தந்துள்ளார்கள்.

அடுத்து ஒரு சில மாதங்களில் 2 ஆயிரம் புதிய பேருந்துகள் பொதுமக்களின் பயன்பாடிற்கு வர உள்ளது. சென்னையை பொறுத்த மட்டில் சுற்றுச்சூழல் மாசுபடுவதை குறைக்கின்ற வகையில் 100 மின்சார பேருந்துகள் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

டாக்டர் எம்.ஜி.ஆர். கோயம்பேடு பேருந்து நிலையத்தில் செயல்படும் கட்டுப்பாட்டு அறையில் 24 மணி நேரமும் கண்காணிப்பு கேமரா மூலம் கண்காணிக்கப்பட்டு போக்குவரத்து நெரில் உடனடியாக சரிசெய்யப் படுகிறது. மேலும் பயணிகள் தெரிவிக்கும் புகார் அனைத்தும் பதிவு செய்யப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்க வழிவகையும் செய்யப்பட்டுள்ளது”.

### பஸ்களில் குறைகேட்டார்

அதனைத் தொடர்ந்து முன்பதிவு செய்துள்ள பல பேருந்துகளில் உள்ளே சென்று அமர்ந்திருந்த பயணிகளிடம் குறைகளை கேட்டறிந்தார். முன்பதிவு செய்யாத பயணிகள் அதிக அளவில் இருந்ததால் அனைத்து பயணிகளும் சிரமமின்றி பயணம் மேற்கொள்ள வசதியாக, கூடுதலாக தேவையான அளவு பேருந்துகளை இயக்கிட உத்தரவிட்டார். போக்குவரத்து நெரிசல் மிகுந்த பகுதிகளில் போக்குவரத்துத் துறையினர், காவல் துறையினருடன் இணைந்து பணியாற்றிட அறிவுறுத்தினார். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பேசிய பயணிகள் அனைவரும் இந்தமுறை மிகவும் நல்ல முறையில் சொந்த ஊர்களுக்கு சென்று வர பேருந்து, முன்பதிவு வசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளும் சிறப்பாக செய்துள்ள அரசுக்கும் தங்களுக்கும் நன்றி தெரிவித்தனர். மேலும், பயணிகளிடம் பேருந்து இயக்கம் மற்றும் குறைகளையும் கேட்டறிந்ததோடு, காத்திருந்த அனைவரும் பயணம் மேற்கொள்ளத் தேவையான அளவு பேருந்துகள் இயக்கப்படும் வரை உடனிருந்து மேற்பார்வையிட்டார் இதன்பயனாக, பயணிகள் சிரமமின்றி பாதுகாப்பாக பயணம் செய்தனர்.

இவ்வாய்வின் போது அரசு விரைவு போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குனர் பாஸ்கரன், மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குனர் அ.அன்பு ஆபிரகாம் மற்றும் போக்குவரத்துக் கழக அலுவலர்கள், பணியாளர்கள் உடன் இருந்தனர்.

## வடசென்னை வடக்கு கிழக்கு மாவட்ட அண்ணா தி.மு.க. சார்பில்

# குப்பைகளை அள்ள 3 சக்கர சைக்கிள்கள்; பிளாஸ்டிக் கூடைகள்: மதுசூதனன் வழங்கினார்

திருவொற்றியூர், நவ.5

வடசென்னை வடக்கு (கிழக்கு) மாவட்ட அண்ணா தி.மு.க. சார்பில் குப்பைகளை அள்ள 3 சக்கர சைக்கிள்கள், பிளாஸ்டிக் கூடைகள் வழங்கப்பட்டது.

### மதுசூதனன் வழங்கினார்

சென்னை காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில் தேங்கி கிடக்கும் குப்பைகளை அகற்றுவதற்காக வடசென்னை கிழக்கு மாவட்ட அண்ணா தி.மு.க. சார்பில் 3 சக்கர சைக்கிள்கள் மற்றும் பிளாஸ்டிக் கூடைகள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. விழாவுக்கு மாவட்ட செயலாளர் ஆர். எஸ்.ராஜேஷ் தலைமை தாங்கினார். மத்திய சென்னை எம்.பி. விஜயகுமார் முன்னிலை வகித்தார். விழாவில் அண்ணா தி.மு.க. அவைத் தலைவர் மதுசூதனன் பங்கேற்று 3 சக்கர சைக்கிள்கள் மற்றும் பிளாஸ்டிக் கூடைகளை தொழிலாளர்களுக்கு வழங்கினார்.

பின்பு மதுசூதனன் நிருபர்களிடம் கூறியதாவது:

தி.மு.க.தலைவர்ஸ்டாலினும், டி.டி. வி.தினகரனும் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பை வழங்கி ஸ்லீப்பர் செல்களாக செயல்பட்டு வருகின்றனர். தினகரனால் அண்ணா தி.மு.க.வில் ஸ்லீப்பர் செல்களை உருவாக்க முடியாது.

ஏனென்றால் தினகரனின் ஆதரவாளரான தங்கதமிழ்ச்செல்வன் எங்களுடன் வந்தால் கூட ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

20 தொகுதிகளில் நடைபெற உள்ள இடைதேர்தலில் நாங்கள் உறுதியாக வெற்றி பெறுவோம். அண்ணா தி.மு.க.வை பற்றி பேச தினகரனுக்கு எந்த உரிமையும் இல்லை. ஏற்கனவே ஜெயலலிதாவால் கட்சியை விட்டு நீக்கப்பட்ட அவர் கட்சியில் உறுப்பினராக கூட இல்லை. அண்ணா தி.மு.க. பொதுமக்களுக்கு ஏராளமான நல உதவித் திட்டங்களை தொடர்ந்து வழங்கி வருகிறது.



பொதுமக்களும் எங்கள் மீது நம்பிக்கையுடன் உள்ளனர். ஆகவே வருகிற இடைத்தேர்தலில் அனைத்து தொகுதிகளிலும் வெற்றி பெறுவோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

இதில் ஆர்.எஸ்.ஜனார்த்தனம், ஏ.கணேசன், மா.ஜெயபிரகாசம்,, ஏ . டே வி ட் ஞா ன சே க ரன் , வி.அலெக்ஸ், ஆட்டோ தேவராஜ், ஆர்.வி.அருண்பிரசாத், சந்தனசிவா, பி. குப்பன், கபிலன், பி.ஜெகன், ஜெயந்தி, ஜானகி சந்திரசேகர், ஆர்.நித்தியானந்தம், எம்.என். சீனிவாசபாலாஜி, ஆர். நித்தியானந்தம், டைகர் தயாநிதி, கே.பி.கர்ணன், கே.பி.விஜி, எல்.எஸ். மகேஷ்குமார், கே.சுகுணா, லட்சுமி தேவி, அரிகிருஷ்ணன், முத்துமாணிக்கம், யுவநாதன், சுப்பிரமணி,

ஆர்.பாஸ்கர், ஆர். லிங்கேசன், ஆர். பிரபா, விஜயகுமார், ஜெஸ்டின் பிரேம்குமார், இஎம்எஸ் நிர்மல், முத்துசெல்வம், வழக்கறிஞர்கள் விஜயகுமார், எஸ்.ஆர்.மணி, அன்பு, தனபால் நகர் சிவகுமார், வேல்முருகன், ஆனந்த், செல்வராணி, ச.முகேஷ், எம்.எஸ்.கார்த்திக், தமிழ், மற்றும் மாவட்ட பிற அணி நிர்வாகிகள், மீனவரணியினர் மீனவ பஞ்சாயத்து சபை நிர்வாகிகள் உள்பட பலர் இருந்தனர்.

# ராஜீவ் கொலையாளிகள் 7 பேரை விடுவிக்க கவர்னருக்கு கடிதம்: தமிழக அரசு முடிவு

சென்னை, நவ.5

ராஜீவ்காந்தி கொலையாளிகள் 7 பேரையும் விடுதலை செய்வது தொடர்பாக தமிழக அரசு, கவர்னருக்கு கடிதம் எழுத முடிவு செய்துள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட முருகன், நளினி, பேறிவாளன் உள்பட 7 பேருக்கு தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் இது ஆயுள் தண்டனையாக கு றை க் க ப் ப ட் ட து . இவர்கள் 27 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் இருப்பதால் இவர்கள் 7 பேரையும் தமிழக அரசு விடுதலை செய்யும் முடிவு எடுக்கலாம். இதுதொடர்பாக தமிழக கவர்னருக்கு பரிந்துரை செய்யலாம் என்று சுப்ரீம் கோர்ட் கடந்த செப்டம்பர் மாதம் தீர்ப்பு கூறியது.

இந்த தீர்ப்பு வெ ளி யா ன து ம் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் தமிழக அமைச்சரவை கூட்டம் நடந்தது. இதில், 7 பேரையும் விடுதலை செய்யும் பரிந்துரை தீர்மானம் நி றை வே ற் ற ப் ப ட் டு , கவர்னர் பன்வாரிலால் புரோகித்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த தீர்மானத்தின் மீது கவர்னர் எந்த முடிவும் எடுக்காததால், முறையான அறிவிப்பு எதுவும் வெ ளி யி ட வி ல் லை . 7 பேர் விடுதலையில் கவர்னர் விரைந்து முடிவு எடுக்க வேண்டும் என்று தமிழக அரசியல் கட்சிகள் கோரிக்கை விடுத்து வருகின்றன. இந்தநிலையில் தமிழக அரசு கவர்னர் பன்வாரிலால் புரோகித்துக்கு கடிதம் எழுதுவது குறித்து ஆலோசித்து வருகிறது. இதுபற்றி தமிழக அரசின் உள்துறை செயலாளர் நி ர ஞ் சன் மா ர் டி , கவர்னரின் கூடுதல் தலைமைச் செயலாளர் ராஜகோபாலுக்கு கடிதம் எழுத உள்ளார். அதில், தமிழக அரசின் பரிந்துரை தீர்மானத்தின் அடிப்படையில் 7 பேரையும் விடுதலை செய்யும் முடிவு எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட உள்ளது.


**பிஎச்ஐ கேபிட்டல் மேனேஜ்மெண்ட் LLP**
LLPIN : AAB-1329
பதிவு அலுவலகம் : 12, சைதன்யா, மூன்றாவது மாடி, காதர் நவாஸ் கான் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை – 600 006
மின்னஞ்சல் : bn@phicapital.in

**மத்திய அரசாங்க கம்பெனி பதிவாளர் சென்னை, தமிழ்நாடு முன்பாக**
**வரையறுக்கப்பட்ட கடன் நிலுவை கூட்டு வியாபார சட்டம் 2008படி, வரையறுக்கப்பட்ட கடன் நிலுவை கூட்டு வியாபார விதிகள் 2008 செக்ஷன் 13(3)படியும், வரையறுக்கப்பட்ட கடன் நிலுவை கூட்டு வியாபார விதிகள் 2009, விதி 17(4)படியும்**
**மற்றும்**
**பிஎச்ஐ கேபிட்டல் மேனேஜ்மெண்ட் LLP பதிவு அலுவலகம், சென்னை – 600 006. மனுதாரர்**
**அறிவிப்பு**
**பதிவு பெற்ற அலுவலகத்தை ஒரு மாநிலத்திலிருந்து, மற்றொரு மாநிலத்திற்கு மாற்றுவது தொடர்பாக**
**(பின் தொடர்ந்த வரையறுக்கப்பட்ட, கடன் நிலுவை கூட்டு வியாபார விதிகள் 2009, விதி 17(4)படி)**

இதனால் பொதுமக்களுக்கு அறிவிப்பது என்னவென்றால், வரையறுக்கப்பட்ட கடன் நிலுவை கூட்டு வியாபாரம் (LLP), வரையறுக்கப்பட்ட கடன் நிலுவை கூட்டு வியாபாரம், பிரிவு 13படி, தங்களது பதிவு பெற்ற அலுவலகம் எண் : 12, சைதன்யா, மூன்றாவது மாடி, காதர் நவாஸ் கான் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை – 600 006, தமிழ்நாடு மாநிலம் என்ற முகவரியில் இருந்து பிராண்ட் யூனிட், புதுடெல்லி – 110021, புதுடெல்லி மாநிலம் என்ற முகவரிக்கு கம்பெனி பதிவாளர், சென்னை அதிகார வரம்பில் இருந்து, கம்பெனி பதிவாளர் புதுடெல்லி அதிகார வரம்பிற்கு மாற்ற அதிகாரபூர்வ பங்குதாரர்களால் (LLP) 02.11.2018 அன்று நடைபெற்ற கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டு, ஒப்புகைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்த மாறுதலால், எந்த ஒரு தனி மனிதர் பாதிக்கப்பட்டால் அதன் காரணத்தையோ, காரணங்களையோ தங்களது மறுப்புக்கான காரணங்களும், அதற்கான விளக்கங்கள் இணைந்த அபிடவிட்டை கம்பெனிகள் பதிவாளர், சென்னை, தமிழ்நாடு அமைச்சக கார்ப்பரேட் செயலக அலுவலகம், பிளாக் எண். 6, பி விங்க், இரண்டாவது மாடி, சாஸ்திரி பவன், 26, ஹாடோஸ் ரோடு, சென்னை – 600034 என்ற முகவரிக்கு இந்த விளம்பரம் வெளிவந்த பதிநான்கு நாட்களுக்குள் (14) விண்ணப்பிக்குமாறும் மற்றும் ஒரு காப்பி LLPயின் பதிவு அலுவலகத்திற்கும் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**மனுதாரரின் சார்பாக**
**பிஎச்ஐ கேபிட்டல் மேனேஜ்மெண்ட் LLP**
**(சிவராம் பி)**
**நியமிக்கப்பட்ட பங்குதாரர்**
**DIN NO : 00066864**

சென்னை
05.11.2018



**பைவ் கோர் எக்ஸிம் லிமிடெட்**
(அரும் சாப்ட் சிஸ்டம்ஸ் லிமிடெட் என்று முன்னர் அழைக்கப்பட்டது)
L32200TN1994PLCO26958
பதிவு அலுவலகம்: சிட்டி சென்டர் பிளாசா, 3வது தளம் அறை எண். 7/48, அண்ணா சாலை,சென்னை–600 002. Tel: (91) - 7042292838,
Email: manager.roc@5core.in, Website: www.fivecoreexim.com

**அறிவிப்பு**

செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) கட்டுப்பாடுகள் 2015ன் கட்டுப்பாடு 47 மற்றும் இதர பொருந்தக்கூடிய கட்டுப்பாடுகளின்படி, கீழ்க்கண்ட வர்த்தகம் குறித்து விவாதித்து ஒப்புதல் வழங்குவதற்காக இயக்குனர்கள் குழுவின் கூட்டம் புதன்கிழமை, 14 நவம்பர், 2018 அன்று இந்திய நேரப்படி (IST) மாலை 4.30 மணிக்கு கம்பெனியின் கார்ப்பரேட் அலுவலகம்: WZ 15B/1, அறை எண். 203–204, உகர்சைன் மார்க்கெட், அசோக் நகர், திலக் நகர், புதுடெல்லி – 110 018 என்ற முகவரியில் நடைபெறுகிறது.

1. 30 செப்டம்பர் 2018ல் முடிந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பதிவு செய்தல்.
2. கம்பெனியின் தணிக்கையாளர்கள் மெசர்ஸ் GSSV & அசோசியேட்ஸ், கணக்கு தணிக்கையாளர்களிடம் இருந்து குறுகிய மறுபரிசீலனை செய்யப்பட்ட தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் பெறப்படும்.
3. இதர விஷயங்கள் குழுவால் தகுந்தவாறு பரிசீலனை செய்யப்படும்.

மேலும், குழு கூட்டத்திற்கு முன்னதாக அன்றைய தினமே நடைபெறும் தணிக்கை குழு கூட்டத்தில் நிதிநிலை முடிவுகளை தணிக்கை குழு பரிசீலித்து ஆராயும்.

மேலும், செபி (உள்வர்த்தகம் தடை) விதிகள் 2015ன் பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் உள்வர்த்தகர்களின் ஒழுங்குபடுத்துதல், கண்காணிப்பு மற்றும் அறிக்கை நடத்தை விதி தொகுப்பின்படி, கம்பெனியின் ஈக்விடி பங்குகள் வர்த்தகம் சனிக்கிழமை 3 நவம்பர், 2018 முதல் வெள்ளிக்கிழமை, 16 நவம்பர், 2018 முடிய (இரண்டு நாட்களும் சேர்த்து) மூடப்பட்டிருக்கும். அதாவது ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தணிக்கையான நிதிநிலை முடிவுகள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் 48 மணி நேரங்கள் கழித்து. இவை அனைத்து இயக்குனர்கள், கேஎம்பிஎஸ் மற்றும் கம்பெனியின் நியமிக்கப்பட்ட ஊழியர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயக்குனர்கள் குழுவின் ஆணைப்படி
பைவ் கோர் எக்ஸிம் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/– சுரிந்தர் கவுர் கல்ரா
நிர்வாக இயக்குனர்

தேதி: 2 நவம்பர், 2018
இடம்: சென்னை



Dr. Agarwal's Eye Hospital

**டாக்டர் அகர்வால்'ஸ் ஐ ஹாஸ்பிடல் லிமிடெட்**
பதிவு அலுவலகம்: 3வது தளம், புகாரி டவர்ஸ், எண். 4, மூர்ஸ் சாலை, ஆப்: கிரீம்ஸ் ரோடு, சென்னை–600006. CIN No.L85110TN1994PLC027366
Tel: 91–44–39916600, Email: investor@dragarwal.com, Website:www.dragarwal.com

**அறிவிப்பு**

செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 29 மற்றும் 47ன்படி, இதர அலுவல்களுக்கு இடையே 30 செப்டம்பர், 2018ல் முடிந்த காலாண்டு மற்றும் ஆறு மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து ஒப்புதல் அளிக்க கம்பெனி இயக்குனர்கள் குழுவின் கூட்டம் செவ்வாய்க்கிழமை, 13 நவம்பர் 2018 அன்று சென்னையில் நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

டாக்டர் அகர்வால்'ஸ் ஐ ஹாஸ்பிடல் லிமிடெட்டுக்காக
டாக்டர் அமர் அகர்வால்
சேர்மன் மற்றும் நிர்வாக இயக்குனர்

இடம் : சென்னை 600 006
தேதி : 04.11.2018



**ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்**
SHRIRAM Commercial Vehicle Finance GETS YOU GOING
Corporate Identity No. (CIN) : L65191TN1979PLC007874
பதிவு அலுவலகம்: மூகாம்பிகா காம்ப்ளக்ஸ், 3வது தளம், எண்.4,லேடி தேசிகா ரோடு, மயிலாப்பூர், சென்னை 600 004.
தொலைபேசி எண்: +91 44 2499 0356 பேக்ஸ்: +91 44 2499 3272.
வெப்சைட்: www.stfc.in இமெயில் ஐடி: secretarial@stfc.in

**தபால் ஓட்டு அறிவிப்பு**

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 110 மற்றும் கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014, விதி 20 மற்றும் 22ன் கீழ்க்கண்ட தகவல்களை நாங்கள் அளிக்கிறோம்.

a) கீழ்க்குறிப்பிட்டுள்ள விஷயங்களுக்காக உறுப்பினர்களின் ஒப்புதலை பெற மின்னணு வாக்குப்பதிவு உள்பட தபால் ஓட்டு மூலமாக வாக்களித்து செயல்படுத்தப்பட உள்ள அலுவல்கள்:–

| அயிட்டம் எண். | சிறப்பு தீர்மானங்களின் விவரங்கள் |
|---|---|
| 1 | கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 186ன் கீழ், கடன், உத்தரவாதம், பத்திரங்களில் முதலீடுக்கு அங்கீகாரம் |
| 2 | ஏப்ரல் 01, 2019 முதல் 5 ஆண்டுகளுக்கு திருமதி. கிஷோரி உதேசி (DIN 01344073) அவர்களை கம்பெனியின் சுயாதீன இயக்குனராக 2வது முறையாக மீண்டும் நியமித்தல் |

b) பரிந்துரைக்கப்பட்ட முறையில் அக்டோபர் 31, 2018 (கட் ஆப் தேதி) அன்று உறுப்பினர்கள் பதிவேடு/பயனுள்ள உரிமையாளர்கள் பட்டியலில் கண்டுள்ள பெயர்களில் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் தபால் ஓட்டு படிவத்துடன் தபால் ஓட்டு அறிவிப்பு அனுப்பும் பணியை கம்பெனி நவம்பர் 4, 2018 அன்று முடித்துள்ளது.
c) மின்னணு மற்றும் தபால் ஓட்டு மூலமாக வாக்களிப்பு துவங்கும் தேதி மற்றும் நேரம்: திங்கட்கிழமை, நவம்பர் 5, 2018 (இந்திய நேரப்படி 9.00 மணி).
d) மின்னணு மற்றும் தபால் ஓட்டு மூலமாக வாக்களிப்பு முடிவுறும் தேதி மற்றும் நேரம்: செவ்வாய்க்கிழமை, டிசம்பர் 4, 2018 (இந்திய நேரப்படி 17.00 மணி).
e) செவ்வாய்க்கிழமை, டிசம்பர் 4, 2018 (இந்திய நேரப்படி 17.00 மணி)க்கு பின்னர் உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் தபால் ஓட்டு படிவம் அனுமதிக்கப்படமாட்டாது மற்றும் உறுப்பினர்களிடமிருந்து பெறப்படாதவையாக கருதப்படும். மின்னணு வாக்குப்பதிவு டிசம்பர் 4, 2018 அன்று இந்திய நேரப்படி 17.00 மணிக்கு சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட்டினால் (சிடிஎஸ்எல்) முடக்கப்படும்.
f) தபால் ஓட்டு படிவங்களை பெறாத உறுப்பினர்கள் கம்பெனி/பதிவாளர் அதாவது இன்டக்ரேட்டட் ரிஜிஸ்திரி மானேஜ்மெண்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு விண்ணப்பித்து நகலை பெற்றுக் கொள்ளலாம்.
g) கம்பெனி – www.stfc.in, பதிவாளர்– www.integratedindia.in, சிடிஎஸ்எல் – www.cdslindia.comல் தபால் ஓட்டு அறிவிப்பு மற்றும் தபால் ஓட்டு படிவம் உள்ளது.
h) மின்னணு வாக்குப்பதிவு உள்பட தபால் ஓட்டு தொடர்பான குறைகளை தீர்ப்பதற்கு அணுக வேண்டிய நபர்: திரு.விவேக் அச்வால்,கம்பெனி செயலாளர், கார்ப்பரேட் அலுவலகம் – வாக்ஹார்ட் டவர்ஸ், லெவல்–3, மேற்கு விங், சி–2, 'ஜி' பிளாக், பந்த்ரா–குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கிழக்கு), மும்பை–400 051. தொலைபேசி எண். + 91–022–40959508. இமெயில் ஐடி: secretarial@stfc.in
i) சட்டப்பிரிவு மற்றும் விதிகளின்படி தபால் ஓட்டு மற்றும் மின்னணு வாக்குப்பதிவு நேர்மையாகவும் வெளிப்படையான முறையிலும் நடைபெற திரு. பி. ஸ்ரீராம், (உறுப்பினர் எண். எப்சிஎஸ் 4862), பிராக்டிசிங் கம்பெனி செயலாளர், (பிசிஎஸ் எண். 3310) சென்னை அவர்களை ஆராய்வாளராக கம்பெனி நியமனம் செய்துள்ளது.
j) கம்பெனியின் பதிவு அலுவலகத்தில் தபால் ஓட்டு முடிவுகள் புதன்கிழமை, டிசம்பர் 5, 2018 அன்று மாலை 5.00 மணிக்கு அறிவிக்கப்படும். கம்பெனியின் இணையதளம் www.stfc.inல் தபால் ஓட்டு முடிவுகள் மற்றும் ஆராய்வாளர் அறிக்கை வெளியிடப்படும். கம்பெனியின் சமபங்குகள் பட்டியலிடப்படும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ் ஆப் இந்தியா லிமிடெட் மற்றும் பிஎஸ்இ லிமிடெட்டிற்கு அவை தெரிவிக்கப்படும்.

இயக்குனர்கள் குழுவின் ஆணைப்படி
ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டுக்காக
ஒப்பம்/– விவேக் அச்வால்
கம்பெனி செயலாளர்

இடம் : மும்பை
தேதி : நவம்பர் 4, 2018